[1971 டிசம்பர் 13

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவர்கள் திறக்கத்தயாராக இருக்கிறார்கள். நாம் தான் பணம் நஷ்டம் ஏற்படக்கூடாது என்று, எந்த ஆலைகள் நஷ்டமில்லாமல் நடக்கும் என்பதைப் பார்த்து, அதை எடுக்க முயற்சி செய்கிறோம்.

* 324 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the closed mills in Madurai have been reopened?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : ராஜாமில், முருகன் மில் போன்றவைகள் மூடப்பட்டிருக்கின்றன. ஏதாவது ஒரு மில்லையாவது சீக்கிரமாக எடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அங்குள்ள மூன்று ஆலைகளையும் எடுக்க மத்திய சர்க்காரால் பரிசீலிக்கப்பட்டு, லாபத்தில் நடத்த முடியாது என்று அறிவித்துவிட்டார்கள்.

இசைக்கருவிகள் உற்பத்தி

* 325 வினா—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) வீணை, புல்லாங்குழல் போன்ற இசைக்கருவிகள் தமிழகத்தில் உற்பத்தி செய்யும் கூட்டுறவு தொழிற்சாலை ஏதேனும் தற்போது செயல்படுகிறதா ?

(இ) ஆம் எனில், அவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா ? எந்தெந்த நாடுகளுக்கு ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, நம்முடைய இசைக் கருவிகள் வெளி நாட்டில் நல்ல கிராக்கியுள்ளவைகளாக இருக்கின்றன. கூட்டுறவு சங்கங்கள் மூலம் இவற்றை உற்பத்தி செய்து, விற்பனை செய்தால், அந்நியச் செலாவணியும் ஈட்ட முடியும். அந்த வகையில் முயற்சி எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தஞ்சை மாவட்டத்தில் இது போன்ற கூட்டுறவு சொசைடி இருக்கிறது. இதிலே சென்ற ஆண்டு 1970–71-ல் ரூ. 38,000-க்கு விற்பனை ஆகியிருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I request the Hon. Minister to state the particular wood from which these instruments are prepared and the places where such wood is available?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தகவல் என்னிடத்தில் இல்லை.